7951

Register Number | | | | | |

# தமிழ்

நேரம் : இரண்டு மணி முப்பது நிமிடங்கள் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) சிந்தை ஆ) வட்டு

இ) திரு ஈ) அகம்

உ) மதி ஊ) எள்ளல்

எ) கோன் ஏ) ஞாலம்.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) மாயம் + உணராத ஆ) ஆறு + வெள்ளம்.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) பேரொளி ஆ) ஒன்றுளதோ.

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) அடக்கமாக

ஆ) மாபெரும்

இ) நெருங்கி.

5. எவையேனும் இரண்டினைப் பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) ஆசிரியரும் மாணவரும் வந்தன.

ஆ) மயில் பேசும்

இ) பறவைகள் பறந்தது.

6. வினைப்பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) உரைத்தார் ஆ) வளரும்.

7. தொழிற்பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) படி ஆ) நட.

8. பாரதிதாசன் பாண்டியன் பரிசு என்ற நூலை எழுதினார்.

( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. மெய்ப்பொருள் காண்பது அறிவுடைமையா ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

10. அன்பு இல்லாத உயிர்வாழ்க்கை சிறக்காது.

( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. பறவைகள் கூடு கட்டின; இரை தேடின; இன்பமாக வாழ்ந்தன.

( நிகழ்கால வாக்கியமாக மாற்றுக ) 2

12. நல்ல குணமுடைய தாயிடத்தில் நல்ல பிள்ளைகள் உருவாகிறார்கள். கெட்ட குணமுடைய தாயிடத்தில் தீய பிள்ளைகள் உருவாகிறார்கள்.

( ஒரே வாக்கியமாக மாற்றுக ) 2

13. எவையேனும் இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் தருக : $2 \times 1 = 2$

அ) ஆண்ட

ஆ) படைத்த

இ) வைத்தல்

ஈ) உதித்து.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய

நூலின்றிக் கோட்டி கொளல்.

15. எவையேனும் நான்கு சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக : $4 \times 1 = 4$

அ) உதித்து

ஆ) புனைபாவை

இ) நற்கருமம்

ஈ) ஆடிப்பாடி

உ) உலாவுதல்

ஊ) நிரம்பிய.

16. எவையேனும் **ஆறு** இலக்கண வினாக்களுக்கு விடையளி : $6 \times 2 = 12$

அ) தெரிநிலை வினைமுற்றினை விளக்குக.

ஆ) உரிச்சொல் என்றால் என்ன ?

இ) நான்காம் வேற்றுமையை விளக்குக.

ஈ) உயர்திணை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

உ) பலசில என்னும் சொற்கள் தம்முன் தாம்வரின் எவ்வாறு புணரும் ?

ஊ) வல்லினம் மிகுமிடங்கள் நான்கினைக் கூறுக.

எ) அகத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

ஏ) உருவக அணியினை விளக்குக.

17. அடிபிறழாமல் எழுதுக :

அ) 'நிலவாய்' எனத் தொடங்கும் இரட்டுறமொழிதல் பாடல். 4

ஆ) 'ஆயிரவ' எனத் தொடங்கும் பழமொழிச் செய்யுள். 4

இ) 'நகுதற்' எனத் தொடங்கும் குறள்.

18. எவையேனும் இரண்டு செய்யுள்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : $2 \times 2 = 4$

அ) "நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு."

ஆ) "பூத்தாலும் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர்."

இ) "சீர்மிகுந்த கதிர்நாட்டின் மேலே அந்தத்
திறல்மிகுந்த வேழநாட்டுப் படைகள்
போர்தொடுக்கப் பாய்ந்தனவாம் கடலைப் போலே !"

19. பாடலின் பொருள் தெளிந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளி : 4

பாலைவனம் சோலை வனமாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளில் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலையுடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல்வெற்றி யெமக்கெய்த வேண்டும்.

வினாக்கள் :

அ) எது சோலைவனமாக வேண்டும் ?

ஆ) சபைகளில் எது முழங்க வேண்டும் ?

இ) எது செழித்தோங்கி வளர வேண்டும் ?

ஈ) எது ஒழிய வேண்டும் ?

20. ஏதேனும் **ஒன்றினை** இடஞ்சுட்டி விளக்குக : 3

அ) 'வற்கடமாய் பசிபுரிந்தும்
எம்கோமான் தனை விடுவேன் அல்லேன்'

i. இவ்வடி எந்த இலக்கியத்தில் இடம் பெறுகிறது ?
ii. இந்நூலின் ஆசிரியர் யார் ?
iii. இவ்வடிகளின் கருத்து யாது ?

ஆ) 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

i. இவ்வடி எந்தச் செய்யுளில் இடம் பெறுகிறது ?
ii. இவ்வடியின் கருத்து யாது ?
iii. இச்செய்யுளின் ஆசிரியர் யார் ?

21. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : 6 × 2 = 12

அ) சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் யாவை ?

ஆ) யாரைக் குடிப்பிறந்தார் என்று குறள் சிறப்பித்துக் கூறுகிறது ?

இ) சமுதாய முன்னேற்றப் பணிகளில் கணிப்பொறியின் பங்கு யாது ?

ஈ) மனம் பண்படுவதற்கு வழி என்ன ?

உ) நம் முன்னோர்கள் கண்ட உண்மை யாது ?

ஊ) 'ஒட்டகமண்டு' - குறிப்பு வரைக.

எ) தேசியம் எதன் அடிப்படையில் அமைய வேண்டும் ?

ஏ) மூவேந்தர்கள் என்பவர் யாவர் ? அவர்கள் செய்த சதி யாது ?

22. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி : 7

அ) 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் கருத்தினை அறிஞர் அண்ணாவின் வழிநின்று விளக்குக.

ஆ) மனவலிமையைப் பற்றி மு.வ. கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

இ) பைக்காரா நதியின் வரலாறு பற்றி நீவிர் அறியும் செய்தி யாது ?

23. ஏதேனும் ஒரு தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) ஒழுக்கம் விழுப்பம் தரும்

ஆ) நூல் நிலையம்

இ) சுற்றுப்புறமும், சுகாதாரமும்.

24. ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண் மற்றும் சொந்த முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) பாரதியாரின் பெருமை குறித்து உன் வெளிநாடுவாழ் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

ஆ) நுமது ஊரில் குடிநீர் வசதி செய்துதர வேண்டி ஊராட்சிமன்ற அலுவலருக்கு ஒரு கடிதம் எழுதுக.

இ) மிதிவண்டி காணாமல் போனதைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் நிலைய ஆய்வாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 4

அ) Birds of same feathers flock together

ஆ) Union is strength

இ) We must have a goal in our life. We must believe that we can achieve greatness. We must love our work and do it with confidence and courage.